<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>CRL.M.P.5634/2021</u>

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை புகார்தரப்பு சாட்சியாகிய குமுசா 1 வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாலட்சுமி | வயது | 20 |
| த.பெ.(அ)க.பெ. | பெருமாள் | தொழில் | டெய்லர் |
| ஊர் | சேம்பரை | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் சேம்பரை கிராமத்தில் வசிக்கிறேன். நான் டெய்லராக வேலை செய்து வருகிறேன். வெங்கடேச பெருமாள் என்னுடைய அண்ணன். எதிரிகள் அனுமன் மற்றும் மாரியின் மாடு எங்கள் கழனியில் 02.07.2021 அன்று மாலை 5.00 மணிக்கு மேய்ந்ததை நான் ஓட்டிவிட்டேன். அதனால் அப்போது எங்களுக்கு இடையே வாய் தகராறு ஏற்பட்டு பின்னர் அவரவர் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மேற்படி அன்றைய தினமே இரவு 8.00 மணியளவில் அனுமன், மணி, ராதிகா, மாரி ஆகிய நால்வரும் எங்கள் வீட்டினிடம் வந்தார்கள். அப்போது எங்கள் வீட்டில் நானும், என் அம்மா, அப்பா, எனது அண்ணன், அண்ணி ஆகியோர் இருந்தோம். அனுமன், ராதிகா, மாரி ஆகிய முவரும் என் அண்ணாவை பிடித்து கொண்டார்கள், மணி என்பவர் எவ எவ தேவியடிா பையன் எனது மாட்டை ஓட்டி விட்டது என்று அசிங்கமாக என் அண்ணனை பார்த்து திட்டி இடது மணிகட்டில் தடியால் எனது அண்ணனை அடித்தார். என் அம்மாவை அனுமன் என்பவர் இடது கன்னத்தில் அடித்துவிட்டார். மணி என்பவர் என்னை வலது கன்னத்தில் அடித்து கீழே தள்ளி காலால்உதைத்துவிட்டார். என் தம்பி சிவகாசியை மணி என்பவர் தடியால் இடது கை மற்றும் தலையில் அடித்துவிட்டார். மறுநாள் 03.07.2021 காலை 5.00

மணிக்கு எதிரிகள் 1 முதல் 9 வரையிலானவர்கள் எங்களது வீட்டின் அருகில் உள்ள பொது ரோட்டில் வந்து நின்று கொண்டு ஆம்பளையா இருந்தா வெளியே வாங்க என்று சத்தமாக கூறி கூச்சல் போட்டார்கள். அதன்பிறகு ஊர்தலைவர் அவர்களுக்கு என் அண்ணன் போன் செய்து எதிரிகள் ரோட்டில் நின்று கொண்டிருப்பதையும் அதற்கு முந்தைய தினம் நடந்த சம்பவத்தையும் தகவல் சொன்னோம். அதன்பிறகு நாங்கள் அனைவரும் ரோட்டிற்கு சென்று பார்த்தோம். மணி என்பவர் எனது அண்ணனை கல்லால் தலையில் அடித்தில் ரத்தகாயம் ஏற்பட்டு மயக்கமாகிவிழுந்துவிட்டார். எனது தம்பி சிவகாசியை எதிரி முத்து என்பவர் இடது மணிக்கட்டு மற்றும் தலையில் கல்லால் அடித்ததில் எனது தம்பி தலை வீங்கிவிட்டது. அதன்பிறகு மணி என்பவர் முதுகு மற்றும் தலை மேல் கையால் அடித்துவிட்டார். கோவிந்தராஜ் என்பவர் எனது தம்பியை கல்லால் தலை மற்றும் முதுகின் மீது அடித்துவிட்டார். அனுமன் மற்றும் மணி கல்லால் என்னை வயிற்று பகுதியில் குத்திவிட்டார்கள். மாரி என்பவர் கொம்பால் எனது விலா எலும்பின் மீது அடித்துவிட்டார். எனது அம்மாவை அனைவரும் சேர்ந்து கண்ணத்தில் அடித்து தர தரவென்று இழுத்து கொண்டு சென்று அடித்தனர். அன்றைய தினம் காலை 8.00 மணியளவில் மேற்படி எதிரிகள் 1 முதல் 9 வரையிலானவர்கள் என் அப்பா கடைக்கு சென்ற போது அவரை தூக்கி கொண்டு அவர்கள் நிலத்தில் வைத்து அடித்ததில் தலைப்பகுதியில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வாய் பகுதி வீக்கமாக காணப்பட்டது. இடது முட்டி வீங்கியிருந்தது. பிறகு எனது அப்பாவை ஊர்தலைவர் மற்றும் கவுண்டர் காப்பாற்றி அழைத்து வந்தார்கள். ஊர்தலைவர் என் அண்ணனிடம் எதிரிகளை ஒன்றும் செய்யமுடியாது நீங்கள் கேஸ் கொடுங்கள் என்று கூறினார்கள். அன்றைய தினம் மதியம் 1.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு நானும், என் அண்ணன், அப்பா, அம்மா, தம்பி அனைவரும் வந்து சிகிச்சை பெற்றோம், ஆனால் எனது அண்ணன் மருத்துவமனையில் அட்மிட் ஆகி 4 நாட்கள் தங்கி சிகிச்சையில் இருந்தார். அப்போது திருப்பத்தூர் தாலுக்கா காவல் நிலை போலீஸார் வந்து என் அண்ணனிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். எங்களிடமும் அவர்கள் விசாரணை செய்தார்கள். ஆனால் அவர்கள் மேற்படி இவ்வழக்கில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே என் அண்ணன் வெங்கடேசபெருமாள் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இம்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தற்போதும் எதிரி மணி நானும் என் குடும்ப பெண்களும்

போகும்போது வரும்போது பைக்கில் இடிப்பது போலவே செல்கிறார். எனவே மேற்படி என்னுடைய சாட்சியத்தை பரிசீலனை செய்து எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கும்படி வேண்டுகிறேன்.